முரசொலி

வார இதழ்

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு 5 | 22-8-58 | வெள்ளி | ஒலி 16

இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகம் எழுப்பி வருகின்ற போர்க் குரல், திராவிட நாட்டிலே மட்டும் பொங்கி எழுகின்ற புதிய குரலல்ல.

இருபதாம் நூற்றாண்டில் உலகத்திலே எங்கு பார்த்தாலும் பரவி இருக்கின்ற விடுதலைக் குரல் அது! அது திராவிடத்திலே ஒரு விதமாக ஒலித்தால், உலகத்திலுள்ள பல வேறு நாடுகளில் வெவ்வேறு விதங்களில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. பலநாடுகள், தங்கள் நாடுகள் தங்களுக்கு உரிமையாக வேண்டும் என்று எழுப்பிய முரசொலியின் காரணமாக—எத்தனையோ நாடுகள் விடுதலை பெற்ற வரலாற்றினையும், இன்னும் எத்தனையோ நாடுகள் விடுதலைக்குப் போரிட்டுக் கொண்டிருக்கிற வரலாற்றையும் நாம் ஏடுகள் வாயிலாக கவனித்துக் கொண்டுதான் இருக்கிறோம். பலநாடுகள் விடுதலைக்குத் தர வேண்டிய விலையைக் கொடுத்த பிறகேதான் தங்கள் சுதந்திர பூமியைப் பெற்றிருக்கின்றன. அதுபோலவேதான்—உலக நாடுகள் தங்களுடைய சரித்திரத்தை எப்படி முடித்திருக்கின்றன என்பதை எண்ணிப் பார்த்துத்தான் — அத்தகைய விலையை நாமும் தந்தாக வேண்டும் என்ற நிலையை உணர்ந்துதான்—திராவிட முன்னேற்றக் கழகமும் இந்தத் தேசியப் போராட்டத்தை நடத்திக் கொண்டு வருகிறது.

யார் கூறுகிறார்கள் திராவிட நாடு விடுதலை பெறமுடியாது என்று? அவர்கள் எல்லாம் உலகத்திலே இன்றைய தினம் நடைபெற்று வருகின்ற வரலாற்றை உணராதவர்கள்!

அந்த எழுச்சி வரலாற்றை முழுதும் விவரிப்பதென்றால், அதற்கு ஒருநாள் போதாது. அந்த அளவுக்கு ஒவ்வொரு நாடும் தங்களுடைய விடுதலைப் போராட்டத்தை நடத்தியிருக்கின்றன. குறிப்பாகவும் சுருக்கமாகவும் ஒரு சில நாடுகளின் வரலாற்றை மட்டும் நான் உங்கள்முன் வைக்க விரும்புகிறேன்.

விடுதலைப் போராட்டம் என்றால் அன்னிய ஆதிபத்தியப் பிடியிலிருந்து சுதந்திரம் பெற்ற சரித்திரம் — சொந்த நாட்டிலேயே அமுக்கப்படுகின்ற ஒரு சமுதாயம் அதிலேயிருந்து தப்பிய வரலாறு— பொருளாதாரத் துறையிலே ஏற்பட்ட உரிமைப் போராட்டங்கள்!

ஆப்பிரிக்கா பகுதிகளில் இன்றைய தினம் விடுதலைக் கனல் மூண்டு எழுந்து. அதன் காரணமாக விடுதலை பெற்ற நாடுகள் எத்தனையோ உண்டு. அவைகளில் ஒன்று பொன் நாடு என்று அழகான தமிழிலும், கோல்ட் கோஸ்ட் என்றும் அழைக்கப்படுகின்ற நாடு! 1957—ம் ஆண்டு, மார்ச் மாதம் தன்னுடைய பெயரை கானா நாடு என்று மாற்றிக் கொண்டு விடுதலை பெற்ற நாடாகத் திகழ்

கிறது. அதன் விடுதலைக்கு முன்னின்று போராடிய தலைவர் நிக்ருமா! அவர் போராடிய நேரத்தில் உலகத்திலேயிருக்கின்ற பிற்போக்குச் சக்திகள் எல்லாம் என்ன பேசின? "கானா நாடு விடுதலை அடையாது! நிச்சயம் அதன் கனவு பலிக்காது!" என்றுதான் சொல்லி வந்தார்கள். ஆனால் நிலைமை என்ன?

கானாநாடு விடுதலை பெற்று விட்டது வெள்ளையரிடமிருந்து. அதற்கு நிக்ருமா மேற்கொண்ட அறப் போராட்ட வழி என்ன?

விடுதலைப் போராட்டத்தில், நமது அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துக் கூறியதுபோல் இரண்டு முறைகள் உண்டு. இன்று உலக நாகரிகத்தின்படி வேட்டு முறை ஒன்று; ஓட்டு முறை ஒன்று! இதில் எந்த முறை நல்லது என்று நிக்ருமா யோசித்தார். ஓட்டு முறையாலேயே பெற்றுவிட முடியும் என்ற முடிவுக்கு வந்தார். 1956—ல் அங்கு பொதுத் தேர்தல் நடைபெற்றது. நிக்ருமாவின் தோழர்கள் அங்கு போட்டியிட்டார்கள். 104 இடங்களில் 72 இடங்களைப் பெற்ற அந்த விடுதலைக் கட்சியினர் சட்டசபையில் போய் உட்கார்ந்தவுடன் என்ன தீர்மானம் போட்டார்கள்? அறிஞர் அண்ணா அவர்களும், நாவலர் அவர்களும், மற்றும் கழக முன்னணி வீரர்களும் அடிக்கடி குறிப்பிடுவார்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அதிக பலத்துடன் சட்டசபைக்குள்ளே சென்றதும், திராவிட நாட்டு விடுதலைத் தீர்மானத்தை முதல் தீர்மானமாகப் போடுவார்கள் என்று! அதைக்கேட்டு இங்கிருக்கும் காங்கிரஸ் நண்பர்கள் கையாண்டி செய்வார்களே—நம்மை ஏதும் அறியாதவர்கள் என்று கூறுவார்களே-அவர்களுக்கு நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்—கானா நாட்டு சட்டசபைக்குள்ளே அமர்ந்தவுடன் நிக்ருமா, முதன் முதலாக "கானா நாடு விடுதலை பெற்றுவிட்டது!" என்ற தீர்மானத்தைப் போட்டார். அந்த அறப்போர் வழியிலே—பலாத்காரமற்ற சாத்வீக முறையிலே—ஓட்டு முறையிலே — ஜனநாயக முறையிலே—கானா நாட்டை விடுதலை பெறச் செய்தார் நிக்ருமோ!

மலாக்கா ஆயிரக் கணக்கானவர்கள் பலியாக — நூற்றுக் கணக்கான பெண்மணிகள் நாட்டு விடுதலைக்காக ரத்தம் சிந்த—இன்று சுதந்திரபுரியாகக் காட்சி தருகிறது!

னேசியா—பல உயிர்களைக் காவு கொண்ட பிறகுதான் பிரெஞ்சு ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து விடுபட்டு, விடுதலை நாடாக ஒளிவிடுகிறது!

இந்த நேரத்திலேதான், நம்முடைய செவிகளிலே உள்ளத்தைத் தாக்கக்கூடிய சோகச் செய்தியாக 'ஆகா' கம்யூனிஸ்ட் சர்க்கார்தானா அப்படிச் செய்தது? குருஷேவா அப்படிச் செய்தார்?' என்ற ஆச்சரியம் தோன்ற—'அவர் வேறு எப்படிச் செய்வார்?' என்று எண்ணத்தக்க நிலையிலேயும் ஹங்கேரியின் விடுதலைப்போராட்டச் செய்திகள் கிடைக்கின்றன. அந்தநாட்டில் ரஷ்யாவின் ஆதிக்கம் இருக்கக் கூடாது—சோவியத்துருப்புக்கள் உடனே நாட்டை விட்டு வெளியேற வேண்டும் — பொதுத் தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும்-என்ற காரணத்துக்காக நாகியுனுடைய தலைமையில் நடைபெற்ற போராட்டமும், அது உடனே அடக்கப்பட்டு,கடைசியில் போராட்டத் தலைவர்கள் எல்லாம் தூக்கிலே தொங்கவிடப்பட்ட கொடுமையான செய்தியையும் நம்முடைய காதுகள் தாங்கிக் கொண்டிருக்கின்றன.

ஹங்கேரியிலுள்ள மாணவர்களும், பெரியவர்களும், பெண்களும், பாட்டாளி மக்களும், நடுத்தர வர்க்கத்தினரும் ஏறத்

[தொடர்ச்சி பக்கம்—6]

மனிதனின் கதை

பி.சி.கணேசன்

கடிதம் 2 — உயிரினங்களின் தோற்றம்

அன்புள்ள மாதவி,

உன் கடிதம் கிடைத்தது. மனிதனின் கதையைக் கேட்க வெகு ஆவலாய் இருப்பதாய் எழுதியிருக்கிறாய். அறிவு எங்கிருந்தாலும் அதைத் தேடிப் பெறும் நீ, அதுவே உன்னை நாடி வரும்போது விரும்பி ஏற்றுக்கொள்வாய் என்பது எனக்குத் தெரியும். வெறும் பொழுதுபோக்குச் சரக்கையே தேடி அலையும் இன்றுள்ள சூழ்நிலையில் வரலாற்றுப் பகுதிகளைப் படித்துணரப் பலருக்கு ஆசையும் எண்ணமும் இருப்பதில்லை. அந்தக் கோஷ்டியில் நீயும் ஒருத்தியாக இல்லை என்பதிலேயே நான் பெருமிதம் அடைகிறேன். பிடிகையிலேயே பெரும்பொழுதைக் கழிக்கிறேனே என நீ ஆயாசமடைவது புரிகிறது. பரவாயில்லை; இதோ, நீ விரும்பிய மனிதனின் கதையை ஆரம்பித்து விடுகிறேன்.

சுமார் ஐந்து லட்சம் ஆண்டுகளுக்கு முன் இந்த நிலவுலகில் முதல் மனிதன்—இன்றுள்ள மனிதனுடன் தோற்றத்தால் மட்டுமே ஒப்பிட்டுப் பார்க்கக் கூடியவன் வாழ்ந்திருக்க வேண்டுமென்று ஆராய்ச்சியாளர்கள் அனுமானிக்கிறார்கள். அவன் குரங்கு மனிதன் அல்லது 'ஏப்மேன்' என்று அழைக்கப்பட்டான். நான்கு கால்களால் நடந்து திரிந்த நிலை மாறி, முன்னிரண்டு கால்களைக் கைகளாக மாற்றிக்கொண்ட காலம் அது. இப்படிக் குரங்கு நிலையிலிருந்து மனித நிலைக்கு மனிதன் மாற ஆரம்பித்த காலம்தான் வரலாற்றில் நாகரிகத்தின் ஆரம்ப காலமாகக் கருதப்படுகிறது.

இந்த மனிதனும் உலகில் மனிதனாகவே தோன்றிவிடவில்லை. எத்தனையோ உயிரினங்கள் பரிணாம ரீதியாகப் படிப்படியாக வளர்ந்து மனித நிலைக்கு வந்து சேர்ந்திருக்க வேண்டும். சூரியனைச் சுற்றிச் சுழலும் தனிக் கோளமாக இந்த பூமி சுமார் 200,00,00 000 ஆண்டுகளாவது இருந்து வந்திருக்க வேண்டுமென்று மதிப்பிடப்படுகிறது. முதலில் நெருப்புக் கோளமாக இருந்த பூமி படிப்படியாகக் குளிர ஆரம்பித்தது. மேற்பரப்பு இறுகிப் பாறைகள் தோன்றின. பள்ளங்களில் நீர் நிரம்பிக் கடல்கள் தோன்றின. கடல் நீர் ஆவியாகிக் கருவுண்டு மேகமாகி மழையாகப் பொழிய, ஓடைகள் தோன்றி, ஓடைகள் ஒன்றாகிச் சிற்றாறுகளும் பேராறுகளும் பெருக்கெடுத்து ஓடி, நிலமடந்தையின் மேனியை அழகுபடுத்தின. இதன் பிறகே உலகில் ஓரே செல்லால் ஆன முதல் உயிரினம் தோன்றியது. இந்த உயிரினத்தின் தோற்றம்தான் உயிர் வளர்ச்சியின் ஆரம்பம். இந்த முதல் உயிர்ப் பொருளும் ஏதோ சந்தர்ப்பங்களின் சேர்க்கையால்தான் தோன்றியிருக்க வேண்டும். இரசாயன முறையில், சில குறிப்பிட்ட பொருட்கள் சேர்க்கையடைய; புரோட்டோபிலாஸம் என்ற முதல் உயிரியக்கம் உலகில் தோன்றியிருக்கவேண்டும்.

இப்படி சந்தர்ப்ப வசத்தால் ஆரம்பித்த உயிரினம் சூழ்நிலையின் சௌகரியங்களைப் பயன்படுத்திக்கொண்டு வளரத் தலைப்பட்டது. இடப் பெயர்ச்சியும், உணவு உண்பதும், இனப் பெருக்கம் செய்வதும் உயிரின் அடிப்படைக் குண இயல்பாகவே கொள்ளப்பட்டது. வெறும் புரோட்டபிலாஸ இயக்கமாகத் தோன்றிய உயிரினம் வளர்ந்து வளர்ந்து, நீரில் வாழும் மீன் போன்ற பிராணிகளாகி, பிறகு நீர் நிலம் இரண்டிலும் வாழும் தவளை போன்ற பிராணிகளாக உருவெடுத்து, பிறகு நிலத்திலேயே வாழும் பாம்பாகி, பல்லியாகி, பறவையாகி, பின் முட்டையிட்டுக் குஞ்சு பொறிக்கும் நிலை தாண்டிக் குட்டிபோட்டுப் பால் கொடுக்கும் மிருகங்கள் தோன்றின. இத்த மிருக வளர்ச்சியின் கடைசி நிலைதான் மனிதன்.

நாகரிகத்தின் உதயகாலம் என்றழைக்கப்படுகிற காலத்தில் மனிதன் கல்லால் ஆன கருவிகளையே பயன்படுத்தினான். வசிக்க வீடும், புசிக்கும் உணவைச் சமைக்க நெருப்பும் அவனது நாகரிகத்தின் குறிப்பிடத்தக்க அம்சங்களாக இருந்தன. காலப்போக்கில் நாய் குதிரை போன்ற மிருகங்களைப் பழக்கி வேட்டையாடுவதில் துணையாக்கிக் கொண்டான். மீன் பிடிப்பதும் அவனுடைய தொழில்களில் ஒன்றாயிற்று. வில்லையும் அம்பையும் வேட்டைக் கருவிகளாக்கிக்கொண்டான். உண்பதோடும் உறங்குவதோடும் அவனுடைய வாழ்க்கை முடிந்துவிடவில்லை. வாழ்க்கையை மெதுவாக ரசிக்கவும் ஆரம்பித்தான். வீடுகளை வேலைப்பாடுகளுடன் அமைத்தான். கண்ட காட்சிகளை சுவர்களில் ஓவியமாகவும் தீட்டினான். புதிய நாகரிகக் காலம் ஒன்று உருவாயிற்று. இது சுமார் எட்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு!

இப்படிப் படிப்படியாக எண்ணங்களிலேயும் வாழ்க்கை முறைகளிலேயும் வளர்ச்சியடைந்த அந்த மனிதன் தேவைகளினால் உந்தப்பட்டு, இடம் பெயர ஆரம்பித்தான். அவன் வளர்த்து வந்த ஆடுகளுக்கும் மாடுகளுக்கும், குதிரைகளுக்கும், அவன் வாழ்ந்த இடங்களில் உணவு பற்றாக் குறையாகப் போனபோது உணவு அபரிமிதமாகக் கிடைக்கும் செழித்த பிரதேசங்களைத் தேடிப் புறப்பட ஆரம்பித்தான். அவனுடைய தேவை அவனை ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாழவிடவில்லை. கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து ஆடுமாடுகளை ஓட்டிக் கொண்டு புறப்பட்டான். இப்படி மனித இனம் நாடோடியாக அலைந்த பொழுதுதான் பலராகச் சேர்ந்து வாழும் பழக்கம் அவனிடம் தோன்றியிருக்க வேண்டும். இடம் விட்டு இடம் செல்லும்போது எத்தனையோ இடர்களுக்கு ஆளானான். கொடுவிலங்குகள் கூட்டம் கூட்டமாக அவனைத் தாக்கின. தற்காப்பு உணர்ச்சி அவனை சேர்ந்து வாழச் செய்தது. ஒற்றுமையின் பலத்தை உணர்ந்தான். சமுதாயமாகச் சேர்ந்து செயல் படுவதிலே உள்ள பலாபலன்களை உணர்ந்தான். உடல் தேவையால் குடும்பமாக வாழ்ந்தவன், தற்காப்பின் அவசியத்தால் குடும்பங்களைச் சேர்த்து சமுதாயமாக்கி, அந்தச் சமுதாயம் குறைவின்றி வாழ ஒழுங்கு முறைகளை வகுத்து, அந்த ஒழுங்குமுறைகள் சரிவர அமுலாக தலைவனையும் உண்டாக்கி, இன்றுள்ள அரசியல் வாழ்வுக்கு அஸ்திவாரமிட்டான்.

நாடோடியாக அலைந்த மனித இனம், ஆற்றங்கரையடுத்துள்ள இடங்களில் அமைதியாகக் கவலையின்றி வாழ்வதற்குள்ள சூழ்நிலை இருப்பதை அறிந்து கொண்டது. பச்சைக் கம்பளம் விரித்தது போன்று கண்ணுக்கெட்டிய தூரம் பசுமை நிரம்பிய பூமியும், வண்டல் தெளிவாகத் தெரியும் அளவுக்குத் தூய பளிங்கு நீரும் நாடோடியாக வாழ்ந்த மக்களை ஆற்றங்கரையை அடுத்துள்ள இடங்களில் தங்கி வாழச் செய்தது. நிலவளமும் நீர்வளமும் கிடைக்கவே நிலத்தைப் பண்படுத்திப் பயிர் விளைக்கும் பக்குவத்தை மெதுவாக அறியத் தொடங்கினான். ஓடியாடித் திரிவது குறையவே ஓய்வு நிறையக் கிடைத்தது. காடும் கரம்பு நிலமும் கழனியானது மட்டுமின்றிக் கலைகளும் தோன்றி வளர்ந்தன. நாகரிகம் வேகத்தோடும் விறுவிறுப்போடும் வளர ஆரம்பித்தது.

எகிப்தும் இந்தியாவும், சினமும் மொஸபடோமியாவும் தான் புராதன நாகரிகத்தின் தொட்டில்கள் என்பதை நீ அறிந்திருப்பாய். உலகின் வேறு இடங்களுக்கு ஏன் அந்தச் சிறப்புக் கிட்டவில்லை என்பதை நீ எண்ணிப் பார்க்க வேண்டும். மேலே குறிப்பிட்டுள்ள நாடுகளிலெல்லாம் வருடந்தோறும் வற்றாமல் ஓடும் ஜீவ நதிகளுள்ளன. பாலையாக இருந்திருக்க வேண்டிய எகிப்து நாட்டில் பசுமையைக் கொழிக்கச் செய்யும் சிறப்புப் பெற்ற நைல் நதி ஓடுகிறது. அதனாலேயே நைல் நதிக்கு 'எகிப்தின் கொடை' என்றொரு காரணப் பெயரும் உண்டு. யூப்ரடிசும் டைக்ரிசும் மொசபடோமியாவை வளங்கொழிக்கச் செய்யும் ஆறுகள். சிந்துவும் கங்கையும் அன்றிலிருந்து இன்றுவரை இந்தியத் துணைக் கண்டத்திற்கு ஏற்றமளித்துவரும் இருநதிகள். ஹுவாங்ஹோவும் யாங்ட்சிகியாங்கும் சின மாதாவுக்குச் சிறப்புச் செய்திடும் இரு பெரும் நதியாரங்கள். இப்படியாக வற்றாத நதியோடும் கரைகளிலெல்லாம் மனிதன் வசதியாக வாழ்ந்து, கலையும் காவியமும், இசையும் எழிலும் வளர்த்தான். கனவும் கற்பனையும் கலையாயின; எண்ணமெல்லாம் இலக்கியமாக வடிக்கப் பட்டன; தொழில்கள் பெருகின; அதோடு தேவைகளும் வளர்ந்தன; தேவை பெருகவே தொழில் நுணுக்கம் சிறந்தது; ரசனை குன்றா வாழ்க்கையில் மனிதன் மூழ்கித் திளைத்தான்.

இப்படியெல்லாம் நான் வருணிக்கும்போது நீ விடும் பெருமூச்சு எனக்கு கேட்கிறது. நைலும், கங்கையும், சிந்துவும் பிற நதிகளும் மட்டுமேதான் நாகரிகம் வளர்த்தனவா? கல் தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய மூத்த பழங்குடியாம் தமிழ்ப் பெருங்குடி மக்கள் காவிரிக் கரையில் கவிபாடி கங்கைக் கரையில் விளையாடிய காலமெல்லாம் உனக்குமா மறந்துவிட்டது என்று நீ கேட்பது என் காதில் விழுகிறது. எப்படி மறப்பேன் மாதவி அந்தப்பெருண்மையை? பெருகிக்கிடக்கும் தமிழ்ச்சுவடிகளும், வையத்தில் வேரூன்றி வான்முட்ட வளர்ந்த நிற்கும் கலைக் கோபுரங்களும் பறைசாற்றிடும் உண்மையை யார் மறைக்க முடியும்? எப்படி மறைக்கமுடியும்?

என் பேனா எதேதோ எழுதத் துடிக்கிறது. ஆனால் கடிதம் நீண்டுவிட்டது மற்றவை என் அடுத்த முடங்கலில்!

அன்புள்ள,
அகத்தியன்

விற்பனையாகிறது!
★ எண்ணக் கருவூலமாய்—
★ வண்ணக் குவியலாய்—
"தென்றல் திரை" வழங்கும்
நாடோடி மன்னன்
[சிறப்பு மலர்]
விலை அணா எட்டு
உடனே எழுதுக:
"தென்றல் திரை", 40, பீட்டர்ஸ் ரோடு, சென்னை—6.

வெள்ளி 22—8—58 சென்னை

அந்தப்பின்னணி!

அரசியல்

ஆட்சி இயல்

—இவற்றுள் அரசியலிலே கைதேர்ந்தவர் காமராசர்.

ஆங்கிலத்தில் பழமொழியொன்று கூறுவார்கள், "அரசியல் நிபுணன் அடுத்த தேர்தலைப்பற்றிக் கவலைப்படுவோன்; ஆட்சி இயல் நிபுணனே அடுத்த தலைமுறையைப்பற்றிக் கவலைப்படுவோன்" —என்று!

இந்தக் கூற்றும் காமராசரை ஒரு தேர்ந்த அரசியல்காரர் என்பதைத்தான் உறுதிப்படுத்துகிறது.

நாளை என்ன தேவை? இந்தச் சமுதாயம் சீர்பட என்னென்ன செய்யவேண்டும்? நாடு நலம்பட எப்படி யெப்படி பணியாற்ற வேண்டும்?

—இதைப்பற்றிக் காமராசர் என்றுமே கவலைப்படுவதில்லை.

"பழங்குடி இனத்தைச் சேர்ந்த ஒருவரை அமைச்சராக்கிப் பெயரளவில் நாம் ஏதோ அவர்களுக்குப் பெரிய நன்மை செய்து விட்டதுபோல் ஒரு நாடகமாடினால், அவர்கள் அத்தனை பேருடைய வாக்குகளுக்கும் ஏகச் சக்கரவர்த்தி ஆகிவிடலாமா?"

"கிருத்துவ மதத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணியை அமைச்சராக்கினால் அதன்மூலம் பெண்ணினத்தையும் கிருத்துவ மதக்காரர்களையும் கவர்ந்து ஒரே கல்லில் இரு காய்களை அடிக்கலாமா?"

—இப்படித் தேர்தலை உத்தேசித்துத்தான் இதுவரை அவரது சிந்தனை சுழன்று வந்திருக்கிறது.

காங்கிரஸ்காரர்களுள் ஒருவர் இறந்து விட்டால் அவர் கண்ணீர் விடுவார்!

ஏன்?

அவரது சேவையை நாடு இழந்து விட்டதே என்ற கவலையால் தூண்டப்பட்டா?

இல்லை; இல்லை!

அடுத்த தேர்தலில் காங்கிரசுக்கு ஒரு வோட்டு குறைந்து விட்டதே—என்ற சோகம் மென்னியைப் பிடிக்க; அவரது கண்கள் குளமாகும்!

—இத்தகைய மனப்போக்கு படைத்தவர்தான், காமராசர்!

எதிரிகளை நசுக்குவதற்கு அரசியலிலே இரண்டு அநாகரிக முறைகள் பெரிதும் விளம்பரமானவை!

ஒன்று மித்திர பேதம்!

—இது கம்யூனிஸ்டுகளுக்கே உரித்தான தனியுடமை! அதனால் தான் லெனின்கூட கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கைப் பெருக்குவதற்கு முதலில் பெரிய கட்சி யொன்றுடன் கூட்டு சேரும்படியும்; பிறகு தக்க சமயம் பார்த்து அந்தக் கட்சியைக் காட்டிக் கொடுத்து அழிக்க வேண்டுமென்றும்; இப்படியே செய்து நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சியைத் தவிர வேறு கட்சியே இல்லாத நிலையை உருவாக்கிக் கொள்ள வேண்டுமென்றும் கூறியிருக்கிறார்.

இரண்டாவது முறை, எதிரியின் கோட்டைக்குள்ளேயே குத்து வெட்டுகளைக் கிளப்பி, பிரித்தாளுவது! இது வெள்ளைக்காரன் கற்றுக் கொடுத்த பாடம்!

ஒரு நூற்றாண்டு காலம் வெள்ளைக்காரன் இங்கு இருந்ததன் பலனோ என்னவோ; காமராசர் அவனிடமிருந்து வேறு எதைக் கற்றுக் கொள்ளாவிட்டாலும் இந்தப் பிரித்தாளும் சூழ்ச்சியை மட்டுமாவது கற்றுக்கொண்டிருக்கிறார்!

முன்பு ஆச்சாரியார் ஆட்சியிலிருந்தபோது இந்தித் திணிப்பு போன்ற பல முட்டாள்தனமான காரியங்களைச் செய்து தனது எதிரிகளையெல்லாம் ஓர் அணியில் சேரவைத்தார்!

ஆனால் காமராசர் அப்படி அல்ல; எதிரிகளை ஒன்று சேரா வண்ணம் தடுப்பதிலேதான் தனது வெற்றி இருக்கிறது என்பதை அனுபவவாயிலாக உணர்ந்து; அதன்படிச் செவ்வனே பிரித்தாளும் சூழ்ச்சியைக் கையாண்டு வருகிறார்.

இன்று தமிழகத்திலே காமராசரை எதிர்த்து நிற்கும் முக்கியமான கட்சி தி. மு. கழகம்தான் என்பதைக் காமராசர்கூட மறுக்கமாட்டார்.

தி. மு. கழகத்திற்கு மக்கள் மன்றத்திலே எப்படி இந்தச் செல்வாக்கு ஏற்பட்டு, படிப்படியாய் வளர்ந்து வருகிறது?

யோசித்தார் காமராசர்! பலநாட்கள் சிந்தனையைச் செலவழித்து தேர்தலுக்குப் பிறகு அந்த உண்மையை நன்றாக உணர்ந்து கொண்டார்.

'தெற்கு தேய்கிறது; வடக்கு வாழ்கிறது'—என்ற அவர்களது வாதத்திலே உண்மை இருக்கிறது; அந்த உண்மைதான் மக்கள் கவனத்தைக் கவர்கிறது; அதனால்தான் பிரிவினை சக்திக்குத் தங்கள் ஆதரவைத் தருகிறார்கள்.

—இப்படி முடிவு கூறியது அவரது சிந்தனை.

"இன்று தமிழகத்திலே தலைதூக்கி நிற்கும் அந்தப் பிரிவினை சக்தியைப் பிளவுபடுத்தி; மூலைக்கு ஒன்றாகச் சிதறவிட்டால்...?"

—கேள்விகள் குடைந்தன, காமராசரது நெஞ்சத்தில்!

அதன்பிறகு திரைமறைவில் அவருக்கும் தோழர் ஆதித்தனுக்கும் என்னென்ன உடன்படிக்கைகள் நடந்தனவோ நமக்குத் தெரியாது; ஆனால் அதன் விளைவாக 'நாம் தமிழர் இயக்கம்' துவக்கப்பட்டது மட்டும் நமக்குத் தெரியும்!

—பிரிவினை சக்தியை மேலும் பிளவுபடுத்தி; அதன்மூலம் நாட்டிலே பிரித்தாளும் சூழ்ச்சியைக் காமராசர் கடைப் பிடித்துவருவதன் அடையாளம்தான் 'நாம் தமிழர் இயக்க'த்தின் தோற்றமாகும்!

இந்த இயக்கத்தைத் தோற்றுவித்தவர்களது பூர்வீகத்தையும் அவர்களது உட்கருத்தையும் சிறிது ஆராய்வோமானால் இந்த உண்மை தெளிவாக விளங்கும்.

பெரியார் தனது சொந்தக் குழந்தையான தி. மு. கழகத்தைப் பரம்பரை வைரியாகக் கருதுபவர்.

"உதைத்த காலுக்கு முத்தமா? உமிழ்ந்த வாய்க்குச் சர்க்கரையா?" என்று பழமொழி சொல்வார்கள்.

ஆறுமாத ஆஸ்பத்திரி வாழ்க்கைக்குப் பிறகும்கூட அவர் காமராசரைக் கண்டித்து ஒரு வார்த்தை பேசவில்லை.

அவர் தனது கட்சி வளர்ச்சிக்கு அப்பாற்பட்ட ஒரு காரியத்தை ஆதரிக்கிறார் என்றால்—ஒன்று அது தி. மு. கழகத்தின் பலத்தைக் குறைப்பதற்காக இருக்கும்; அல்லது காமராசர் கையைப் பலப்படுத்துவதற்காக இருக்கும்.

—இந்த நிலையில் பெரியார் அவர்கள் வரிந்து கட்டிக் கொண்டு இந்தப் புது இயக்கத்தில் தீவிரமாகப் பங்கு கொள்வதைக் காண்கிறோம்!

காமராசருக்கு இதனால் எள்ளளவாவது நன்மை கிடையாது என்றால் அவர் இந்தக் காரியத்தில் ஈடுபடுவாரா? அல்லது சேரத் தகாத சகாக்களோடுதான் சேருவாரா?

இவ்வளவு நாள் பாடுபட்டு; இரத்தம் சிந்தி உருவாக்கிய திராவிடநாட்டு இலட்சியத்தைப் பெரியார் விட்டுக் கொடுப்பது ஒன்றே இந்த இயக்கத்திற்கும் காமராசருக்கும் எவ்வளவு தொடர்பு இருக்கிறது என்பதை நிரூபிக்கக்கூடியது.

இந்தப் பின்னணியைத் தெரிந்து கொண்டோர் ஒரு விதத்தில் காமராசரது ராஜ தந்திரத்தைப் பாராட்டினாலும்; அதற்குப் பலியானவர்களைப் பார்த்து பரிதாபப்படாமல் இருக்கமாட்டார்கள். ஃ

கலைவாணர் நினைவு இதழ்

29-8-58-ம் நாள் வெளிவரும்

முரசொலி

★ மறைந்த கலையுலக மாணிக்கம்

★ நகைச் சுவை மன்னர்

★ கலைவாணர் அவர்களின்

நினைவு இதழாக வெளி வரும்.

— நிர்வாகி, முரசொலி

இடி முழக்கமும், காற்றின் அலறலும் பொன்மணி. அறவாழி இருவரையும் மேலும் மௌனத்தில் ஆழ்த்தின. பெரு மழையைக் காற்று வாரி வந்து பள்ளிக்கூடத்தினுள்ளே ஊற்றிக் களித்தது. அவள் அப்படியே அசைவற்று நின்று கொண்டிருந்தாள். அள்ளி யிறைத்ததுபோல் அவள் மேலெல்லாம் மழைநீர்;பாதிக்கு மேல் நனைந்து விட்டாள்.

அறவாழி அவளருகே ஓடி, "அடடா" என அனுதாபம் தெரிவித்தான்.

அவள், அவனை ஒரு முறை விழுங்கி விடுவதுபோல் பார்த்தாள். "நான் போய் வருகிறேன்" என்று கூறிவிட்டு, அவசரமாக வெளியே கிளம்பினாள்.

"என்னது? இந்த மழையிலா?" என எதிர்வந்து தடுத்தான் அறவாழி.

"இல்லை! நான் போய் ஆக வேண்டும். அம்மா மழையைக் கண்டதும் ரொம்ப கவலைப்படுவார்கள். தேடிக்கொண்டு புறப்பட்டாலும் புறப்பட்டு விடுவார்கள்!"

"நீ என்ன பச்சைக் குழந்தையா? பாப்பாவா? மழைக் காற்றில் ஒரு இடத்தில் பாதுகாப்பாக ஒதுங்கக் கூடவா தெரியாது?"

இந்தக் கேலியைக் கேட்டதும் அவள் சிரித்துவிட்டாள். ஆனால் அந்த சிரிப்பைத் தொடர்ந்து கண்ணீரும் எட்டிப் பார்த்தது.

"ஆகா! மின்னலைப்போல் சிரித்தாய்! உடனே மழையைப் போல் கண்ணீர் சிந்துகிறாய்! நன்றாயிருக்கிறது இதுவும்!" —மேலும் கேலி செய்தான் அறிவாழி.

"சரி, நான் வருகிறேன். குடையிருந்தால் கொஞ்சம் கிடைக்குமா? தம்பியிடம் கொடுத்து அனுப்பிவிடுகிறேன்!"—கண்களைத் துடைத்துக்கொண்டே கேட்டாள் பொன்மணி.

"குடையா? இருக்கிறது! கொடுக்கவும் தடையில்லை. அதைத் திருப்பி நீயே கொண்டு வந்து தருவதாயிருந்தால் கொடுக்கிறேன்!"

"விளையாடாதீர்கள். இருந்தால் கொடுங்கள். இல்லாவிட்டால் பரவாயில்லை. நான் வருகிறேன்."—வாயிற் புறத்தை நோக்கி நடந்த பொன்மணியின் கரம்பற்றி இழுத்து, "என்ன இது, பிடிவாதமா?" என செல்லமாகக் கண்டித்தான் அறிவாழி.

பொன்மணி எதுவும் பேசவில்லை. கையை அவனிடமிருந்து விடுவித்துக் கொள்ளவும் இல்லை.

அறவாழி, அருகே நெருங்கினான். பற்றிய அவள் கரத்தை நெற்றியில் ஒத்திக்கொண்டான். மழை நீரால் நனைந்திருந்த அந்தக் கரம் சூடாக இருப்பதை உணர்ந்தான்.

"பொன்மணி! நான் உனக்கு ஏதாவது தவறு செய்துவிட்டேனா? ஏனிப்படி ஓடுகிறாய்—இந்த மழையில்?"

"நான்தான் பெரிய தவறு செய்து விட்டேன். நினைத்தது ஒன்று—நடந்தது ஒன்று. இந்தக் குற்றத்திற்கு மன்னிப்பே கிடையாது என்பதைப் புரிந்துகொண்ட பிறகுதான் எனக்கு நிம்மதியில்லாமல் போய் விட்டது!"

"அழாதே பொன்மணி' அழாதே! நீ செய்ததை இப்போது நான் குற்றமாகவே கருதவில்லை. உன்னையும் உன் குடும்பத்தாரின் பெருந்தன்மையையும் உணர்ந்து கொண்டேன்!"

"உண்மையிலேயே அப்படிச் சொல்கிறீர்களா? அல்லது என் மன சமாதானத்திற்காகவா?"

"பொன்மணி! இந்த ஊருக்கு வரும்போது என் நினைவெல்லாம் கரகமாடிக் கண்ணனைப் பற்றியே இருந்தது. பழி வாங்கக் காத்திருப்பானே என்று எண்ணினேன். அதன் முதற் கட்டமும் நிறைவேறிவிட்டது. அடுத்தடுத்து அவனால் வர இருக்கிற எல்லாத் தொல்லைகளையும் உன்னை நினைத்தே சமாளிபபது என்ற புதிய துணிவை நான் பெற்றிருக்கிறேன். இதிலிருந்து புரிந்துகொள்; உன்னை நான் எவ்வாறு கருதுகிறேன் என்று! நீதான் என் வாழ்வுக்கு விளக்கு! என் நெஞ்சத்தில் நிறைந்திருக்கும் தெய்வமே நீதான் கண்ணே!"

"எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அதோ பயங்கரமாக உறுமிக்கொண்டு "சோ" வெனக் கொட்டுகிற மழையில் மரம் செடிகள் ஆடுவதுபோல என் மனமும் அலைக்கழிக்கிறது. நான் சிறுமி—நீங்கள் உலகம் தெரிந்தவர். நான் ஏதாவது தவறு செய்தால் என்னைத் திருத்துங்கள். நீங்களும் என்னோடு சேர்ந்து கொணடு என்னைப் பாழ்படுத்தி விடாதீர்கள்!"

'பொன்மணி! பைத்தியம்!"

"ஊஹூம்! இது சரியில்லை! ஆமாம்; இது சரியில்லை என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. என் அப்பாவும் அம்மாவும என்னை மிகவும ஒழுங்கான பெண் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்குத் துரோகம் செய்யமாட்டேன்!"

"நீ யாருக்கும் துரோகம் செய்யவிலலை. இருவரின் நெஞ்சமும் ஒன்றுபட்டது. இயற்கை வகுத்த நெறிதானே தவிர அதற்கு முரண்பட்ட வழியல்ல இது! வெறும் ஆவேசத்திற்கும் உணர்ச்சிகளுக்கும் அடிமைப்பட்டு உன்னை அழித்துவிட ஒருக் கணமும் துணியமாட்டேன். இளமை வழங்கும் காதல் பாஷையை இலக்கண வரம்பு வழுவாது பயிலவே நான் விரும்புகிறேன். பெண்களுடைய உயிரினும் மேலான கற்பு நெறிக்குக் களங்கம் விளைவித்து அவர்கள் வாழ்வோடு விளையாடும வரம்புகெட்டவர்களின் பாதையிலலை—நான் கண்ணிழந்த கபோதியாகிவிட்டாலும்—காலெடுத்து வைக்கமாட்டேன். என்னை நீ தைரியமாக நம்பலாம் பொன்மணி!"

"உங்கள்மீது நம்பிக்கையில்லையென்று நான் கூறவில்லையே! நீங்கள் என்னை நட்டாற்றில் தவிக்க விட்டுவிடுவீர்கள் என்றும் சொல்லவில்லையே! சிறுபிள்ளைத்தனமாக ஏதாவது தவறுசெய்துவிட்டு பிறகு நமக்கு நாமே வருந்தக்கூடாது என்றுதானே சொல்ல வந்தேன்!"

"அதோ, பெரு மழையில் தெருவிலே ஓடுகிறதே ஆறுபோல் தண்ணீர்—அந்த நீரில் நான் தாள் கப்பல்கள் செய்து மிதக்க விடுவதுண்டு; சிறுவனாயிருக்கும்போது! சதுரமான ஒரு தாளை நான்காக மடித்து, அதில் ஒரு முனையை மடக்கி தோணி போல ஆக்கி, தெருவிலோடும் தண்ணீரில் மிதக்கவிடுவேன். அந்தக் கப்பலைப் பார்த்துக் கொண்டே மழையில் நெடுந்தூரம் நடந்து செல்வேன். உடம்பெல்லாம் நனைந்துவிடும். அன்றிரவு காய்ச்சலும் வந்துவிடும். தாய் தந்தையர் கஷ்டப்படுவார்கள். நான் ஏறிச் செல்ல முடியாத கப்பலை நான் செய்வானேன்? அது போகிற அழகைப் பார்த்துக்கொண்டு மழையில் நனைவானேன்? பிறகு அது மழை நீரில் அமிழ்ந்துவிடுவது கண்டு வருந்துவானேன்? இப்போது கேள்விகள் எழுகின்றன. ஆனால் இளம் பிராச

"தினத்தந்தி"யின் இரட்டை நாக்கு!

★

"அன்னையின் ஆணை"யைப்பற்றி...

★

"சிவாஜி கணேசன்பற்றி அண்ணதுரை கூறிய கருத்தை மாறன் பொருத்தமான இடத்தில் ஒட்ட வைத்திருக்கிறார்!"

—'தினத்தந்தி'
(திருச்சி பதிப்பு)

"சென்னை அண்ணமலை மன்றத்தில், சிவாஜி கணேசனின் "கட்டபொம்மன்" நாடகம் நடந்தபோது, சிவாஜி கணேசனை அமெரிக்க நடிகர் 'மார்லன் பிராண்டோ'வுக்கு ஒப்பிட்டு, அவரைவிட சிறந்த நடிகர் சிவாஜி என்று பொருள்பட அண்ணதுரை பாராட்டியது நினைவு இருக்கலாம். இதையே வசனமாக நுழைத்து இருக்கிறார் மாறன், கொஞ்சமும் பொருத்தம் இல்லாமல்!

—'தினத்தந்தி'
(சென்னைப் பதிப்பு)

யத்தில் இந்தக் கேள்விகள் எழுவதில்லை. ஆனால் நிச்சயமாகச் சொல்வேன்; இப்போது அப்படி ஒரு கப்பலைச் செய்ய மாட்டேன். அதன் பின்னால் மழையில் ஓடவும் மாட்டேன். இப்போது நான் கட்டுகிற கப்பல் வாழ்க்கைக் கப்பல். அதில் நானும் என் ராணியும் ஏறிக்கொள்வோம். புரிகிறதா பொன்மணி! இந்தக் கப்பல் கட்டும் வேலை சிறுபிள்ளைத்தனமானது அல்ல என்பதை தயவுசெய்து தெரிந்துகொள்!"

"பெரியவர்கள் கட்டுகிற கப்பலும் சமயத்தில் மூழ்கிவிடுகிறதல்லவா?"

"உலகம்கூடத்தான் ஒரு காலத்தில் சிதறிப்போய்விடும் என்கிறார்கள். சூரியன்கூட ஒரு காலத்தில் உடைந்த கண்ணாடித் துண்டுகள் போல துகள் துகளாகப் போய்விடக்கூடும். அதையெல்லாம் நினைத்தால் மனிதர்கள் வாழவே முடியாது!"

"உங்கள் படிப்புக்கு நான் எம்மாத்திரம்? எதைச் சொன்னாலும் நம்ப வேண்டியதுதானே?"

"அய்யோ—இந்தக் காலத்தில் படித்தவன்தான் ஊரை அதிகமாக ஏமாற்றுகிறான். அதனால்தான் எல்லோரும் படிக்க வேண்டுமென்று அறிஞர்கள் கூறுகிறார்கள்!"

"ஏன்? எல்லோரும் சேர்ந்து ஊரை ஏமாற்றவா?"

"இல்லை! எல்லோரும் படித்துத்தேர்ந்து விட்டால் பிறகு யாரும் யாரையும் ஏமாற்ற முடியாதல்லவா?"

"உங்கள் ஊரிலே வந்து தகடு எடுப்பதாகச் சொல்லி எல்லோரையும் ஏமாற்றிய எங்கள் ஊர் கண்ணன் பெரிய படிப்பாளியா?"

"பழைய கால புராணங்களையாவது படித்திருக்கிறான் அல்லவா? அதிருக்கட்டும்—நமது ஆராய்ச்சி எங்கேயோ சென்றுகொண்டிருக்கிறது...!" எனப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, பொன்மணியை அன்போடு தழுவிக்கொண்டான் அறவாழி.

"உஸ்!" எனக் கண்டிக்கும் பாவனையில் பொன்மணி அவனை விட்டு விலகுவதற்கும் பயங்கரமான இடிகள் ஒன்றைத் தொடர்ந்து ஒன்றாக ஒலிப்பதற்கும் சரியாக இருந்தது.

"வீர்!" எனக் கத்திக்கொண்டு அவள், அவனை ஓடித் தழுவிக்கொண்டாள். அவள் மேனி கிடுகிடுவென நடுங்கிற்று.

"பயப்படாதே! 'அர்ச்சுனா! அர்ச்சுனா!' என்று மந்திரம் சொல்லு! இடி ஓடிவிடும்!" என சிரித்துக் கொண்டே அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

"நான் ஏன் அவன் பெயரைச் சொல்லவேண்டும்?" என்று குறும்பாக அறவாழியைப் பார்த்துக் கொண்டே தன் மெல்லிய கரங்களால் அவன் கழுத்தைப் பின்னிக் கொண்டாள்.

"மாமழை போற்றுதும்!
மாமழை போற்றுதும்!

என இருவரும் பாடுவோமா?" என்று கேட்டான் அறவாழி.

அவள் பாசத்தோடு அவன் முகவாய்க்கட்டையில் தன்னுடைய கன்னத்தை ஒத்திக் கொண்டு கண்களை மெய்மறந்து சாத்திக் கொண்டாள். இன்ப ஸ்பரிசத்திலே உணர்விழந்திருந்த அறவாழியின் கண்கள் மேசைமீது திரும்பின. மேசையில் இருந்த கலித்தொகைப் புத்தகத்தில் மழைநீர் சொட்டி முழுவதுமே நனைந்து போயிருந்தது. ஓடிப்போய் புத்தகத்தை எடுத்தான். நூலின் மேலட்டை கையோடு வந்து விட்டது. எல்லாப் பக்கங்களும் நனைந்து கையோடு வந்துவிட்டன. நெய்தற்கலியே எஞ்சியிருந்தது. அதில் "வாடை தூக்க வணங்கிய தாழை!" என்ற அருமையான வரி அவன் கண்களில் தென்பட்டது. அந்த வரியின் பொருளை அவன் சுவைத்தான். அவளுக்கும் மெல்ல மெல்ல கற்றுக் கொடுக்க வேண்டும் என்று தனக்குள்ளாகவே சொல்லிக் கொண்டு மகிழ்ந்தான்.

"இந்தப் புத்தகம் முழுதும் என்ன இருக்கிறது, தெரியுமா?" எனக் கேட்டான்.

"மழைத் தண்ணீர்!" என்று வெடுக்கெனப் பதில் சொன்னாள்.

"மழைதான்! அத்தனையும் முத்துமழை! சர்க்கரை மழை! தேன் மழை! தெவிட்டாத இன்ப மழை! கண்ணே! கலித்தொகை யென்று இதற்குப் பெயர். எல்லாம் காதலைப் பற்றியதுதான்! பால் விற்கும் ஆயர்பாடிப்பாவையின் காதல்! மீன் பிடிக்கும் மின்னல் கொடியின் காதல்!...அடடா..."

"அப்ப...பானை சட்டி விற்கும் பெண்ணின் காதல்......இதில் கிடையாதா?"

"எல்லாம் இருக்கிறது! தமிழ் நாட்டுப் பெண்களின் காதல் உள்ளத்திற்கு இந்தப் புத்தகம் ஒரு கண்ணாடி!"

"அதுகிடக்கட்டும் - நேரமாகிறதே — நான் போக வேண்டுமே!"

"அப்படியொரு நினைப்புக் கூட உனக்கு வருகிறதா?"

"பார்த்தீர்களா? இப்பத்தானே சொன்னீர்கள்; உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டு விடக்கூடாது என்று! உலகத்தையே மறந்துவிடலாமா? தாய் தந்தை குடும்பம் இவைகளையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிடலாமா?"

"உண்மைதான் பொன்மணி—தாய், தந்தை, குடும்பம், மட்டுமல்ல — எல்லாவற்றையும்விட மேலான நாடு—இவைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்தாமல், இந்தப் பாசங்களை அதிகப்படுத்தக்கூடிய உணர்வுதான் காதல் என்பதை நான் மறந்துவிடமாட்டேன். நீ போகலாம். நான் தடை சொல்லவில்லை. ஆனால் ஒன்று; நாம் பேச வேண்டியதையெல்லாம் பேசி முடித்து விட்டோமா?"

"இனிமேல் சந்திக்கவே மாட்டோமா?"

"நீ விரும்பினால் — மனம் வைத்தால்—எப்போதும் சந்திக்கலாம்—மழையும் காற்றும் தாங்கவில்லை. நானே உன்னைக் கொண்டு வந்து வீட்டில் விட்டு வருகிறேனே!"

"நாம் இருவரும் சென்றால் ஊரார் பார்த்து என்ன சொல்வார்கள்?"

"இந்த மழையில் யாரும் வெளியே கிளம்பமாட்டார்கள். நாமிருவருந்தான் ஒரே குடையின் கீழே, தெருவிலே முழங்காலைத் தொட்டுக் கொண்டு ஓடும் தண்ணீரில் நடந்து செல்லப் போகிறோம். நமக்குத் திருமணம் ஆன பிறகு இப்படி ஒரு அருமையான வாய்ப்பை இந்த மழை விரைவிலே அளிக்குமோ என்னவோ—அதனால் இப்போதே அந்த இன்பத்தை சுவைக்கலாம்; புறப்படு!" என்று குடையை எடுத்து விரித்தான் அறவாழி. குடைக்குள்ளேயிருந்து ஒரு தேள் கீழே விழுந்து ஓட இடம் பார்த்தது. தேளைப் பார்த்ததும் பொன்மணியின் விழிகள் அவளையறியாமலே அறவாழியின் விழிகளோடு மோதிக் குறும்பு புரிந்தன.

"தேளைப் பிடித்துத் தருகிறேன்; கையில் கொட்டிக்கொள்ளுகிறாயா?" என்றான் அவன்.

"வேண்டாம் — வேண்டாம்! முன்பு நீங்கள் என் காதில் போட்ட மந்திரம்தான் என்னை இந்தக் கதிக்குக் கொண்டு வந்துவிட்டது. மறுபடியும் காதில் ஊதி ஊதி என் இருதயத்தை பலூன் மாதிரி பெருக்க வைத்து வெடித்துப் போகும்படிச் செய்து விடாதீர்கள்!" எனக் கூறி அவன் தோளில் முகத்தைச் சாய்த்துக்கொண்டு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள் பொன்மணி.

காற்றின் வேகம் அதிகமானதே தவிர குறையவில்லை. மழையும் கொட்டிக் கொண்டேயிருந்தது. எப்படியும் வீடு போய்ச் சேரவேண்டும் என்ற துடிப்பு பொன்மணிக்கு அதிகமாகி விட்ட காரணத்தால் அறவாழி புறப்பட்டான். காற்றை எதிர்த்து, கதவைத் திறந்து கொண்டு வெளிக் கிளம்பினார்கள். அறவாழி குடையை மிகவும் பலமாகப் பிடித்துக் கொள்ள வேண்டியிருந்தது அவனோடு நெருங்கி பொன்மணி குடையின் கீழே நடந்தாள்.

வானமே இருண்டு, பூமியையும் இருளடையச் செய்திருந்தது. கண் தெரிய முடியாத அளவுக்கு ஒரே மழை! மழைத் துளிகளைக் கற்கள் போல மேலே வீசியடித்தது காற்று! எந்த நேரத்தில் மேலே விழுமோ என்று பயங் காட்டிக் கொண்டிருந்தன தெருவோரத்திலேயிருந்த மரங்கள்!

அறவாழியும் பொன்மணியும் வெளியே கிளம்பியது தவறு என்று அஞ்சி நடுங்கினார்கள். பத்திரமாக வீடு போய்ச் சேர முடியும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இல்லை. இடையிடையே நெஞ்சை உலுக்கும் பயங்கர இடி முழக்கம—கண்ணைப் பறிக்கும் மின்னல். எதைப் பற்றியும் யாரைப் பற்றியும் கவலைப்படாமல் அறவாழி, பொன்மணியை இறுக அணைத்துக் கொண்டு, மேலும் மேலும் நடக்கலானான்.

காற்றின் வேகத்தில் அவன் கையிலேயிருந்த குடை பறக்க ஆரம்பித்தது. குடையைப் பறி கொடுத்துவிட்டு இருவரும் ஒரு மரத்தடியில் ஒதுங்கினார்கள். அவர்கள் கண்ணுக்கு நேரே, அவர்கள் ஒதுங்கிய மரத்திற்குப் பக்கத்து மரம் ஒடிந்து கீழே விழுந்தது. மரத்தடியில நிற்கவும் பயம் தோன்றியது. என்ன ஆனாலும் சரி; வீட்டுக்குப் போய்விடுவது என்று இருவரும் உறுதியெடுத்துக் கொண்டு ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொண்டு நீர் வீழ்ச்சிபோல் கொட்டும் மழைக்கிடையே நடந்தனர்.

ராஜினாமா செய்வாரா?

"நான் திடடம் கொடுத்தால் இராஜினாமா செய்து விடுவதாக ஒவ்வொரு மேடையிலும் நிதிக்கும் கல்விக்கும் அமைச்சரான சுப்பிரமணியம் சொல்லி வருகிறார். இராஜினாமா செய்வதற்கேற்ப சந்தர்ப்பமும் சூழ்நிலையும், அவசியமும் வாய்ப்பும் ஏற்பட்டபொழுதெல்லாம், அவர் செய்தாரா?

"முதல் சந்தர்ப்பம்—ஆச்சாரியார் ஆட்சிக் காலத்தில் அவர் கொண்டுவந்த புதிய கல்வித் திட்டத்திற்கு இவர் துதி பாடினார். அதற்கு ஆதரவு தேடும் வகையில் முழு மூச்சுடன் பரப்பி வந்தார். அவரது ஆட்சி மாறி காமராசர் முதலமைச்சர் பதவியைக் கைப்பற்றும் நேரத்தில், அத் திட்டத்தை அடியோடு நீக்கப் போவதாகச் செய்தி பரவியபொழுது --இந்த கொங்கு நாட்டுக் கோமான், தனது சுருதியை மாற்றி, 'குலமுறைக் கல்வித் திட்டத்தை ஆதரித்தால் பதவி போய்விடுமே' என்று பயந்து காமராசர் முன் நின்று, பல்லெல்லாம் தெரியக் காட்டி, பதவியில் ஒட்டிக் கொண்டார்.

"தமிழ்நாடு-ஆந்திரம் - கன்னடம் - கேரளம் நான்கும் இணைந்த தட்சிணப் பிரதேசம் என்ற திட்டத்தை ஆச்சாரியார் பரப்பிய பொழுது அதற்கு ஆதரவளித்து, முழுமூச்சுடன் பிரச்சாரம் செய்த சுப்பிரமணியம் 'உனக்கு தட்சிணப் பிரதேசம் வேண்டுமா? அல்லது அமைச்சர் பதவி வேண்டுமா?' என்று காமராசர் கேட்க, காமராசருக்குப் பக்கபலமாக நின்று பதவியோடு ஒன்றிவிட்டது-இரண்டாவது சந்தர்ப்பம்!

"மூன்றாவது சந்தர்ப்பம்-இவர் டெல்லி சென்று இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் தமிழ் நாட்டிற்காக ரூ. 400 கோடி ஒதுக்கும்படியாகக் கோர, அதைக் குறைத்து 'ரூ 170 கோடிதான் தரமுடியும்' என்று அதிகாரத்தோடு நேரு கூற வாய்மூடி மௌனியாகத் தமிழ் நாட்டை நோக்கி வந்தார்.

"நீங்கள் சொல்லுங்கள்; இவர், ராஜினாமா செய்வாரா?

—அறிஞர் அண்ணா

விலை தருவோம் - விடுதலை பெறுவோம் !

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தாழ மூன்று லட்சம்பேர் ஒரு நாள் ஒன்று கூடி ஊர்வலமாக வானொலி நிலையத்தை நோக்கிச் சென்றனர். ஏன்? எதற்காக? தங்களுடைய நாட்டு விடுதலைக்காக தாங்கள் தயாரித்த பதினாறு கோரிக்கைகள் அடங்கிய வேண்டுகோளை வானொலியின் மூலம் ஒலிபரப்புவதற்காக! ஆனால் ரஷ்ய துருப்புக்கள்—அடக்குமுறை வெறியர்கள்—அந்த மூன்று லட்சம் பேர் கொண்ட பிரமாண்டமான அணிவகுப்பைச் சுட்டு வீழ்த்துவதற்காகப் போலீசாரை ஏவினார்கள். அந்த நேரத்தில் 'ஆம்புலன்ஸ்' படைகள் வந்தன. பாதுகாப்புக்காக—முதல் உதவிக்காக 'ஆம்புலன்ஸ்' படை வருகிறது என்று எதிர்பார்த்த மக்கள் எல்லாம் ஆனந்தப்பட்டனர். 'ஆம்புலன்ஸ்' வண்டியிலேயிருந்து டாக்டர் உடையிலே பலர் இறங்கினார்கள். சிகிச்சைக்காக வருகிறார்கள் என்று எண்ணி காயம்பட்டவர்களும், படாதவர்களும் அவர்களை வரவேற்கின்ற நேரத்தில், டாக்டர்களாக வந்த அத்தனை பேரும் பட்டாளத்து சிப்பாய்களாக மாறி அங்கிருந்த மக்களைச் சுட்டு வீழ்த்தினார்கள்!

அந்த மாபெரும் போராட்டம் விடுதலைத் தலைவன் நாகியைத் தூக்கிலிட்ட [காரணத்தால் இன்றைய தினம்] அடங்கியிருக்கலாம். ஆனால் அது திடீரென்று ஒருநாள் கொழுந்துவிட்டு எரியத்தான் போகிறது! புகைந்து கொண்டிருக்கும் அந்த எரிமலை நிச்சயமாகப் பொங்கி வழியத்தான் போகிறது!

அரசியல் வட்டாரத்திலேயும் இப்போது பேசப்படுகிறது; 'நாகி இப்போதுதான் தூக்கிலிடப்பட்டார் என்று கருதுகிறீர்கள்? இல்லை; இல்லை! அது பல மாதங்களுக்கு முன்பே நடந்துவிட்ட நிகழ்ச்சி! ஆனால் செய்தி இப்போதுதான் சொல்லப்படுகிறது!' என்று!

இப்படி அடக்குமுறை வெறியினை—அதிகார பாணங்களைச் சரமாரியாக அங்கே பிரயோகித்தது, நாங்கள்தான் ஜனநாயகத்தினுடைய முன்னோடும் பிள்ளைகள்—பலாத்காரமற்றவர்கள்—மக்களுடைய உள்ளத்தை உணர்ந்தவர்கள்—என்று இங்கு கூறுகிறார்களே, அந்த கம்யூனிஸ்டுகளுடைய வழிபாட்டுக்கு உரிய தலைவர்—குருஷேவ்! அவருடைய அரிய பெரிய முயற்சியினால்தான் நாகியைப் போன்றவர்கள் தூக்கிலிடப்பட்டார்கள்!

அடுத்தபடியாக, இன்றைய தினம் இங்கிலாந்திலேயுள்ள பார்லிமெண்டுக்குக் கட்டுப்பட்டு—ஆனால் 'கட்டுப்பட மாட்டேன்' என்று மறுத்து வெளியேறத் துடித்துக் கொண்டிருக்கிற அல்ஸ்டர் மாகாணம் என்று அழைக்கப்படுகிற வட அயர்லாந்து இன்று நடத்துகின்ற போராட்டத்தையும், அதன் விடுதலைக்குப் பாடுபடும் 'ஷின்பேன்' இயக்கத்தையும், நமது திராவிட முன்னேற்றக் கழகத்து செயல் முறைகளோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். ஒரு காலத்தில் பலாத்காரத்தில் நம்பிக்கை வைத்திருந்த அந்த இயக்கம் இன்று ஓட்டு முறையிலே போராடிக் கொண்டு வருகிறது.

அல்ஸ்டர் மாகாணத்திலேயிருந்து பத்து பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கிலாந்தில் இருக்கிற பார்லிமெண்டுக்கு அனுப்பப்பட வேண்டும். வட அயர்லாந்தின் விடுதலை இயக்கத்தார்—"நமக்கு நாமே" என்ற தத்துவத்திலே போராடிக் கொண்டுவரும் "ஷின்பேன்" இயக்கத்தார் பத்து இடங்களிலும் போட்டியிட்டார்கள். பார்லிமெண்டிலே இருப்போர் பரிகாசம் செய்தார்கள், '625 பேர் கொண்ட பார்லிமெண்டிலே இந்த பத்து பேர் சென்று என்ன கிழித்துவிடப் போகிறார்கள்' என்று! அதைப் பொருட்படுத்தாமல் பத்து பேரும் போட்டியிட்டனர்; ஆனால் இருவரே வென்றனர்!

யார் அந்த இரண்டு பேர்? அவர்களுடைய வயதென்ன? தலை நிறைத்தவர்களா? தள்ளாடும் வயதா? பல்லாடும் பருவமா? தடியூன்றி நடக்கின்ற காலமா? அலல; அல்ல! வாலிப முறுக்கு—நரம்புகளிலே புதுத் திமிர்—இரத்த ஓட்டத்திலே சூடான கிளர்ச்சி கொண்ட இரண்டு வாலிபர்கள்! டாம் மிட்செல் என்ற ஒருவனுடைய வயது 21 பிலிப் கிளார்க் என்ற மற்றவனுடைய வயது 23.

அதுவும் எப்படி வெற்றி பெற்றார்கள்? மக்களிடத்திலே போய் ஓட்டு கேட்கமுடிந்ததா? 'எங்களைத் தேர்ந்தெடுங்கள்' என்று வேண்ட முடிந்ததா? முடியவில்லை! தேர்தல் நடைபெறுகிற நேரத்திலே அவர்கள் இருந்த இடம் சிறைச்சாலை!

625 பேர் கொண்ட இங்கிலாந்து பார்லிமெண்டிலே தங்கள் விடுதலைக் குரலெழுப்ப இரண்டே பேரைத் தேர்ந்தெடுத்தது அல்ஸ்டர் மாகாணம்!

அந்த ஷின்பேன் இயக்கத்தையும் திராவிட முன்னேற்றக் கழகத்தையும் ஒப்பிட்டுப் பாருங்கள்!

அங்கே 625—க்கு இரண்டு பேர்!

இங்கே 505—க்கு இரண்டு பேர்—சம்பத், தருமலிங்கம்!

நமது தாயகத்தின் விடுதலை முழக்கத்தை எடுத்துச் சொல்ல—அதன் அவசியத்தை அறிவுறுத்த இரண்டுபேர் நிற்கிறார்கள். அந்த 505 பேரும் தெரியவில்லை—அவர்கள் ஒவ்வொருவரும் ஏதோ 63 நாயன்மார்களில் ஒருவர் போலத்தான் தெரிகிறார்கள்! ஆனால் நம்மவர் இருவர்தான் வானத்திலே இருக்கின்ற நட்சத்திரங்களுக்கிடையே தெரிகின்ற ஒரு சூரியன், ஒரு சந்திரன் போலத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்! இந்தியத் துணைக் கண்டத்தின் காது அவர்களுடைய உதடுகளின் பக்கம் திருப்பப்பட்டிருக்கிறது!

இது விடுதலை போராட்டத்திலே—வெற்றியை அணுகுகின்ற கட்டங்கள் பலவற்றுள் பெருமைக்குரிய ஒன்று!

நாம் இன்று அறவழியிலே கொண்டிருக்கிற நம்பிக்கை—ஓட்டு முறையில் கொண்டிருக்கிற நம்பிக்கை உலக நாடுகளில்—வட அயர்லாந்து போன்ற இடங்களில் இன்று கைக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதற்காகவே இதைக் குறிப்பிட்டேன்.

அல்ஜீரியாவிலே விடுதலைப் போர் நடைபெறுகிறது—இன்னும் முடியவில்லை. அந்த விடுதலைப் பட்டாளத்தில் எழுபதினாயிரம் வீரர்கள் அணிவகுத்து நின்று கொண்டிருக்கிறாகள். தலைவர்கள் விமானத்தில் பறந்து கொண்டிருக்கிற நேரத்திலேயே விமானத்தோடு கைது செய்யப்படுகிறார்கள், பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தால்!

இந்த அளவுக்கு ஒவ்வொரு நாட்டிலேயும் விடுதலை எழுச்சி பொங்கி எழுந்து கொண்டிருப்பது போலவேதான், இந்தியத் துணைக் கண்டத்திலே அஸ்ஸாம் பகுதியிலே நாக நாட்டினர்—பறவைகளைப்போல் திரிந்து—பசி வந்த நேரத்தில் உண்டு—களைப்பு வந்த நேரத்திலே கண்ணயர்ந்து காலத்தைக் கடத்தும் காட்டுமிராண்டிகள் என ஒருகாலத்தில் கருதப்பட்டு வந்த நாகமலை இனத்தவர்—இன்று தங்களுடைய நாடு தனி நாடாக ஆகவேண்டும்—விடுதலை பெறவேண்டும் என்கின்ற முழக்கத்தைச் செய்கிறார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன் நம் ஆசியாவின் ஜோதி—அலகாபாத் மாவீரர்—பண்டிதர் நேருவும், பர்மாவின் பிரதமரும் அஸ்ஸாம் பகுதிக்கு சுற்றுப் பயணம் செய்து, நாகர் பகுதிக்குச் செல்லுகின்ற நேரத்தில், பண்டித நேருவுக்கு ஒரு வாழ்த்துப் பத்திரம் வாசித்தளிக்க வேண்டுமென்ற கோரிக்கை விடப்பட்டது.

சுற்றுப்பயணத்தை அமைத்த அதிகாரிகள் அந்த வரவேற்புப் பத்திரத்தை வாங்கிப் படித்துப் பார்த்தார்கள். அதிலே என்ன எழுதியிருந்தது?

"பண்டிதரே, வருக! அறிவுலகின் ஜோதியே, வருக! உலக உத்தமரே, வருக! சமாதானத்தின் வெண்புறுவே, வருக!" என்றல்லாம் வார்த்தைகளைக் கொட்டிய நாகமக்கள், கடைசியிலே தங்களுடைய இருதயத்தைத் திறந்து காட்டியிருந்தார்கள்.

"பண்டித நேரு அவர்களே! நாகர்களுடைய தனி நாடு கோரிக்கையை நீங்கள் நிறைவேற்றித் தாருங்கள்!" என்ற வேண்டுகோளை அதிலே பொறித்திருந்தார்கள்.

அதைப் பார்த்த அதிகாரிகள் "இந்த வரவேற்புப் பத்திரிக்கையை எங்களது நேரு ஏற்கார்; அவருக்குத் தாங்காது! ஆகவே இதை நாங்கள் அனுமதிக்கமாட்டோம்!" என்று கூறிவிட்டார்கள். 'சரி' என்றார்கள் நாகர்கள். அவர்கள் அதிகம் பேசவில்லை போலும்! கண்ஜாடை காட்டுவார்களாம்—பிறகு கையைக் கத்திப் பிடியிலே வைப்பார்களாம்—அவ்வளவுதானும்! அவர்களிடத்திலே இவர்கள் சொன்னார்கள்; அவர்களும் சரியென்றார்கள். தனி நாடு கோரிக்கைபொறித்த வரவேற்புப் பத்திரத்தை வாங்கிக் கொள்ளமாட்டேன்; ஏற்றுக் கொள்ள மாட்டேன்—என்றவர் அன்று பேச இருந்தார். கூட்டமும் கூடியது. பர்மா பிரதமர் முதலில் பேசி முடித்தார். பிறகு ஆசியாவின் ஜோதி—அகண்ட திருவிளக்கு—சமாதானத் தூதுவர்—என்னேக்கிலும் புகழ் பெற்றவர்—மன்னாதி மன்னர் எழுந்தார். அவருக்கே இயல்பான கம்பீரத்தோடு நாக

தி. மு. க. தலைமை நிலைய முதல் வெளியீடு!

வளம் காண வழி!

அறிஞர் அண்ணாவின்

அரிய கருத்துரை

[சென்னை சட்டமன்றத்தில், 1958-59-ம் ஆண்டின் வரவு-செலவு பொது விவாதத்தின்போது ஆற்றிய பேருரைகளின் தொகுப்பு.]

இந்நூல்...

அரசியல் துறையினருக்கு அரிய விளக்கம் தரும் அறிவுக் களஞ்சியம்!

கொள்கை விளக்கப் பணியில் ஈடுபட்டுள்ள கழகத் தோழர்கள் ஒவ்வொருவர் கையிலும் இருக்க வேண்டிய பெருந்துணைக் கருவி!!

விலை 8 அணா

குறிப்பு: தனிப்பிரதி வேண்டுவோர், புத்தக விலையுடன் 15 புதுக்காசுகள் அஞ்சல் செலவிற்காக அனுப்பவும். 50 பிரதிகளுக்கு அதிகமாக வேண்டுவோருக்கு 20 சதவிகிதம் கழிவு உண்டு. வி. பி. பி. இல்லை. தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

விவரங்களுக்கு:—

தி. மு. க. தலைமை நிலையம்—'அறிவகம்'—சென்னை—13.

மக்களைப் பார்த்து, "நாகாஸ்" என்றார். அவ்வளவுதான்; நேருவின் வாய் திறக்கப்பட்டதும் ஏதோ பெரிய புயற்காற்று வீசுவதாகக் கருதிக் கொண்டார்களோ என்னவோ, அங்கே இருந்த பல்லாயிரக் கணக்கான நாகர்களும் எழுந்தார்கள். அவருக்கு முதுகைக் காட்டிக் கொண்டு போய்விட்டார்கள்! நேரு அவர்கள் தவித்தார்; திணறினார்; பக்கத்திலிருந்த பர்மா பிரதமர் ஆறுதல் சொன்னார். என்ன செய்வது? கூட்டத்தை முடித்துக் கொண்டு நேரு திரும்பிவிட்டார். அந்த அளவுக்குத்தான் நாகர்களுடைய போராட்டம் அங்கே துவங்கியது. ஆனால் இன்றோ பலாத்காரத்தில் இறங்கியிருக்கிறார்கள் என்றால், அதற்கு வழி வகுத்துக் கொடுத்தவர்கள் இவர்கள்தான்! இந்த அரசாங்கம்தான்! நேருபிரான்தான்!

அவர்கள்தான் இன்றைய தினம் நாக நாட்டு விடுதலைத் தலைவன் பிஜோவினுடைய தலைக்கு ஐயாயிரம் ரூபாய் விலை வைத்திருக்கிறார்கள்! விடுதலைத் தலைவனுடைய தலையை யார் கொண்டு வருகிறார்களோ அவனுக்கு ஐயாயிரம் ரூபாய் தரப்படுமாம்!

பழையகாலத்து 56 தேசத்து ராஜாக் கதைகளில் —பெரிய பெரிய மலைக்கள்ளர்களுடைய கதைகளிலே கேள்விப்பட்டிருக்கிறோம் — சிலருடைய தலைகளைக் கொண்டு வருபவர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் பரிசளிக்கப்படும் என்று முரசறைவார்கள். புராணத்திலே படித்திருக்கிறோம் — வாழைத் தண்டிலே தலைசெய்து அமணனுக்கு முன்னால் கொண்டு வந்து கொடுத்தான் ஒரு புலவன் என்று குமணனுடைய சரிததிரத்தில் படித்திருக்கிறோம்!

அதை இன்றைய அரசியலில் காணும்போது உள்ளபடியே வேதனை அடைகிறோம்!

இப்படித் தலையைக் கொடுத்துத்தான் ஒவ்வொரு நாடும் விடுதலை பெற வேண்டியிருக்கிறது என்பதற்காகவே இதைக் குறிப்பிடுகிறேன்.

ஆனால் தலைகள் கொய்யப்பட்டாலும்—கரங்கள் பறித்தெடுக்கப்பட்டாலும் — கால்கள் துண்டிக்கப்பட்டாலும் உள்ளத்திலே கனிந்து வருகின்ற விடுதலைக் கனல் எந்த நேரத்திலும், எந்த நாட்டிலும் அணைந்தது கிடையாது.

அதற்கு ஒரு உதாரணம்...

காஷ்மீர் சிங்கம் ஷேக் அப்

[அடுத்த பக்கம் பார்க்க]

கேவா கலர் வர்ணப் படப் பிரதிகள்: பிலிம் சென்டர் ஸ்டூடியோ, பம்பாய்

[ஆகஸ்ட் 22, 23, 24-தேதிகளில் தினசரி 4 காட்சிகள். காலை 9-15, மாலை 1-45, 6, இரவு 10.]

அகிலம் சுற்றுகிறது; ஆளுவோரும் சுற்றுகிறார்கள்!

"அமைச்சர்கள் எப்போது பார்த்தாலும் சுற்றுப்பயணம் செய்துகொண்டே இருக்கிறார்கள். இவர்கள் சாதாரண தொண்டர்களாக இருந்த காலத்தில் இப்படி சுற்றுப்பயணம் செய்ததில் அர்த்தமுண்டு. அமைச்சர்களான பிறகு தங்கள் வேலைகளில் அக்கறை செலுத்தவேண்டாமோ?"

அமைச்சர்களின் ஆனந்தமான வாழ்க்கையை இடித்துக் கூறுவது—யார்?

முதல் வகுப்பிலே; அநேகமாக குளிர்சாதனப் பெட்டியிலேயே பிரயாணம் — செல்லுமிடமெல்லாம் வரவேற்புகள்—வாழ்த்துக்கள்-மலர் மாலைகள்!

திறப்பு விழாக்கள் போன்ற திருப்பணிகள்!

விருந்து வேடிக்கைகள்!

களைப்பெடுத்தால் நடன விருந்துகள்!

—ஆண்டிலே முக்கால் பகுதி நாட்கள் இப்படி பழைய காலத்து ராஜாக்களின் சுந்தர வாழ்க்கையைப் போல கழிகிறது!

அதற்கா எதிர்ப்பு?

அதையா கூடாதென்பது?

அறுபதாண்டு விடுதலைப் போராட்டத்திலே விளைந்த பலனல்லவா அது? 'தியாகம்' அறுவடை செய்துதந்த தித்திப்பான வாழ்க்கை அல்லவா அது?

இருந்தாலும் காங்கிரஸ் அமைச்சர்களது கோலாகல வாழ்க்கையை — ஆளும்துறையில் அக்கறையின்மையை—கவனமின்மையை எடுத்துக்காட்டி "திருந்துங்கள்" என்று எச்சரிக்கிறார் ஒருவர்!

இந்தப் பேறு பெறவில்லையே நாம் என்று ஏங்கித் தவிக்கும் வேண்டாத யாரோ விடுக்கும் கண்டனமல்ல அது!

எதிர்க் கட்சிக்காரர்கள் தொடுக்கும் கணையுமல்ல!!

இந்தியப் பிரதமர் பண்டித நேருவே சொல்கிறார், அமைச்சர்கள் ஊர் சுற்றியே காலத்தைக் கடத்துவதாக—ஆட்சித் துறையிலே அக்கறையற்றிருப்பதாக!

ஆனால், இந்தச் செய்தி வெளிவந்த ஏட்டிலேயே நாம் கண்களைச் சுழலவிட்டால் கனம் அமைச்சர்களின் திருவுலாக் காட்சிகள் பல நமக்குப் புலப்படும். எந்தத் தலைநகரிலாவது எந்த அமைச்சராவது இருக்கிறாரா என்று தேடித்தான் பார்க்க வேண்டும்!

●

"கேரளத்தில் ஓணம் திருவிழா காரணமாக காங்கிரஸ் தலைவர் தேபரின் கேரளச்சுற்றுப் பிரயாணம் தள்ளிவைக்கப் பட்டிருக்கிறது. முன்னேற்பாட்டின்படி ஆகஸ்ட் 25-ல் ஆரம்பமாக இருந்த அந்தச் சுற்றுப்பயணம், அடுத்த மாத முதல் வாரத்தில் ஆரம்பமாகும்."

— எர்ணாகுளம் செய்தி

●

"காங்கிரஸ் தலைவர் தேபரின் சுற்றுப் பிரயாணத்திற்கு முன்னால், யூனியன் பாதுகாப்பு மந்திரி வி. கே. கிருஷ்ண மேனன் கேரளம் முழுவதிலும் மூன்று தினங்கள் விஜயம் செய்வார்."

— பாதுகாப்பிலாக்கா செய்தி

●

"தென்னிந்திய சுற்றுப் பயணத்தில் ஈடுபட்டிருக்கும் ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் நேற்று உதகமண்டலத்தில் தங்கிய பிறகு மைசூர் வந்தடைந்தார். மோட்டாரில் வண்டியூர் வன விடுதிக்குச் சென்றார். தேநீர் பருகியபின் 22 சதுரமைல் விஸ்தீரணமுள்ள மிருகங்களின் சரணாலயத்தைச் சுற்றிப் பார்த்தார். பிரசித்திபெற்ற காட்டெருமைக் கூட்டத்தையும், புள்ளி மான்களையும் கண்டு களித்தார். நாளைய தினம் ஜனாதிபதி நகரின் வழியே சம்பிரதாய முறையில் பவனி செல்வார். மாலை பிருந்தாவனத்திற்குச் சென்று பிறகு பெங்களூருக்குப் பயணமாவார்."

— பத்திரிகைச் செய்தி

●

"20-8-58 அன்று சென்னை எழும்பூரிலிருந்து திருவனந்தபுரம் எக்ஸ்பிரசில் புறப்படும் சென்னை நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம், மதுரை, மேலூர், திருச்சி முதலிய இடங்களுக்கு விஜயம் செய்துவிட்டு, 22-8-58 மாலை சென்னை மீனம்பாக்கத்திற்கு விமான மூலம் வந்து சேருவார்."

—நிதியிலாக்கா அறிக்கை

●

"திருக்கழுக்குன்றத்திற்கு விஜயம் செய்த சென்னை சர்க்கார் மின்விசை இலாக்கா அமைச்சர் நெய்வேலி கிராமத்திற்கும் சென்றார். அங்கே இருபது வீடுகளில் ஆறு மாட்டுக் கொட்டில்களாக இருப்பது கண்டு வருத்தம் தெரிவித்தார். 'சாலூர்புல் நர்சரி'க்குச் சென்றார். பிறகு செங்கல்பட்டு முசாபரி பங்களாவில் காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசினார்."

— செய்தி

நேரு பிரான் குறிப்பிடுகிறார்; பொறுப்புள்ளவர்கள் சுற்றிக் கொண்டே இருக்கக் கூடாது என்று!

ஆனால் நிலைமை என்ன? உலகத்தோடு-அதைச் சுற்றுகின்ற 'ஸ்புட்னிக்'கோடு போட்டி போட்டுக் கொண்டல்லவா சுற்றுகிறார்கள் அமைச்சர்களும், மற்றவர்களும்!

விடுதலை ...

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

துல்லாவை ஒரு நாளல்ல; இரண்டு நாட்களல்ல; 1600 நாட்கள் கொடுஞ் சிறையிலே போட்டு வாட்டினார்கள்! யார் அந்த ஷேக் அப்துல்லா? எப்படிப்பட்டவர்? காஷ்மீர் சிங்கம்! பண்டித நேரு அந்த சிங்கத்தை இங்கே அழைத்து வந்து, ஜின்னாவுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்யச் செய்து, "பாக்கிஸ்தான் கேட்பது தீது! ஜின்னா சாதாரணமானவர்!" என்றெல்லாம் முழங்கச் செய்தார். அதுவரை அவர் நேருவுக்குத் தோழனாக—அடிமையாக இருந்தார் — 'காஷ்மீர சிங்கம்' என்று அழைக்கப்பட்டார்!

சிங்கம்கூண்டிலே அடைக்கப் பட்டதுபோல, அந்த காஷ்மீர் சிங்கம் 1600 நாட்கள் சிறையிலே அடைக்கப்பட்டார். பிறகு வெளியிலேயும் விடப்பட்டார். மறுபடியும் விடுதலைக் கனலைக் கக்கினார். காஷ்மீர் சுதந்திரம் பெற்றே ஆகவேண்டும் என்பதற்காக! மறுபடியும் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார். நான் காஷ்மீருடைய போராட்டத்தை—விடுதலைப் போராட்டத்தின் வரிசையிலே வைக்கப்படக் கூடிய ஒன்று என்று கூறிவிடமாட்டேன். ஆனால், உள்ளத்திலே எழுகின்ற உணர்ச்சிகள்—எடுத்தாளுகின்ற கொள்கைகள்—சிறைக்கம்பிகளுக்குள்ளே தள்ளிவிடுவதாலோ—சித்திரவதைகளுக்கு ஆளாக்குவதாலோ — தூக்கு மேடையிலேயே நிறுத்துவேன் என்று துன்மார்க்க மொழி பேசுகின்ற காரணத்தாலோ—அழிந்துவிடாது என்பதற்காகவே குறிப்பிடுகிறேன்.

அதைப்போல் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய எழுச்சிகளை—அது காட்டி வருகின்ற விடுதலைக்குத் தேவையான காரணங்களை—தயாரித்து வருகின்ற விடுதலைப் படையை ஏச்சாலோ பேச்சாலோ — அடக்குமுறையாலோ — அலட்சியத்தாலோ அழித்துவிட முடியாது—என்பதை உணர்த்தவே இதைக் கூறுகிறேன்.

ஜனநாயக முறையிலே—சர்க்கார் பலாத்காரத்தைப் பிரயோகித்தால் வரவேற்று—பலாத்காரத்திற்குப் பலாத்காரம் என்ற முறையிலே அல்ல —ரத்தம் கேட்கிறீர்களா; தருகிறோம்—எலும்புகளை முறித்துக் கொடுக்க வேண்டுமா; நரம்புகளை அறுத்துக் கொடுக்கவேண்டுமா; கபால ஓடுகள் வேண்டுமா; வீட்டுக்கொரு பிள்ளை வேண்டுமா; தருகிறோம்—எங்கள் இருதயத்திலே உங்கள் துப்பாக்கி ரவை பாயவேண்டுமா; மார்பைத் திறந்து காட்டுகிறோம் என்கிற அளவுக்கு இலட்சோப இலட்சம் வீரர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திலே கொள்கை காக்கத் தயார் தயார் என்று சர்க்காருக்கு உணர்த்த விரும்புகிறேன்.

"திராவிட முன்னேற்றக் கழகத்தார் அரசியல் ஞானம் அற்றவர்கள்!" — சொலவது யார் தெரியுமா? ஞானபூபதி காமராசர்! வாதத்திற்காக ஏற்றுக் கொண்டால், அவர் நம்மைப் பார்த்து அரசியல் ஞானம் அற்றவர்கள் என்று கூறினாரே தவிர, அறவே ஞானம் அற்றவர்கள் என்று கூறவில்லை. அதாவது காமராசருக்குத் தெரிந்த அரசியல் ஞானம்—அரசியல் தெகடுதத்தம் நமக்குத் தெரியாதுதான்; நிச்சயம் தெரியாதுதான்! உள்ளபடியே திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் கருத்துக்கள்—ஆதாரங்கள் — விடுதலைக்கான காரணங்கள் — அனைத்தும் இதுவரை எந்த காங்கிரஸ்காரரால் வரையறுத்து மறுக்கப்பட்டிருக்கின்றன? சரியான காரணங்களைக் காட்டி யார் மறுத்தார்கள்? சொன்ன காரணங்கள் எல்லாம் சொத்தைக் காரணங்கள் — போலி வாதங்கள்!

"திராவிடநாடு என்ற சொல் இலக்கியத்திலே இல்லை-ஆகவே அதை அடைய முடியாது" என்று மாபெரும் பொய்யைச் சொன்னார்கள். டாகூரின் தேசியப் பாடலை, மனோன்மணியம் எழுதிய சுந்தரம் பிள்ளையின் பாடலை ஆதாரத்திற்கு எடுத்து வந்து காண்பித்தோம். போகட்டும்; அப்படி ஒரு சொல் இல்லை என்பதற்காக திராவிடநாடு உருவாகக் கூடாதா?

பாகிஸ்தான்—எந்த இலக்கியத்திலே இருந்தது அந்தப் பெயர்? எங்கே இருந்து அந்த வார்த்தையை எடுத்தார்கள்? அது ஒவ்வொரு எழுத்தாக எடுத்துக் கோர்க்கப்பட்ட ஒரு சொல்லாகும். உலகத்திலே எங்கெங்கு முஸ்லீம்கள் வாழ்கிறார்களோ, அந்தந்த நாடுகளைத் தேடிப் பிடித்து அவற்றின் முதல் எழுத்துக்களை ஒன்றாகச் சேர்த்து உருவாக்கிய பெயர் பாகிஸ்தான்!

பஞ்சாபின் முதல் எழுத்து 'P' — வடமேறகேயுள்ள ஆப்கானியாவிலிருந்து 'A'—காஷ்மீரிலிருந்து 'K'— இரானிலிருந்து 'I'— சிந்துவிலிருந்து 'S'—துக்கானிஸ்தானிலிருந்து 'T'—ஆப்கானிஸ்தானிலிருந்து 'A'—பிறகு பலுசிஸ்தானின் கடைசி எழுத்தாகிய 'N'யை கடைசியில்போட்டு PAKISTAN என்று பெயர் கொண்டார்கள்! இப்படி எடுத்துச் சேர்த்த வார்த்தை பாகிஸ்தான்! தனியாகக் கிடைத்த கோகினூர் வைரம்—கோலார் தங்கம் நம் திராவிடநாடு என்ற பெயர்!

அதனுடைய விடுதலைக்குப் பாடுபடும் நாம் — அந்த விடுதலைப் போராட்டத்தில் வெற்றி அடைவது நிச்சயம்! நிச்சயம்!!

●●●

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6, தமிழ்நாடு